Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 325

செவ்வாய்க்கிழமை 17 ஒக்ரோபர் 2023

புரட்டாதி 30 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

யாழ்ப்பாணப் பல்கலையிலுள்ள

# மே 18 நினைவுத்தூபியை அகற்ற மீண்டும் முயற்சி!!

## பலமுனையில் விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 17

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள மே 18 நினைவுத் தூபியை மீண்டும் அந்த இடத்திலிருந்து அகற்றுவதற்கு பல தரப்புகளும் பகீரதப்பிரயத்தனம் மேற்கொண்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் ஒருவரும், விசுவமடு மற்றும் கட்டுடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுமகன்கள் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்டுள்ள இருவருமாக மேற்கொண்ட முறைப்பாடுகளையடுத்து அது தொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

»11



தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்புகள்

## நண்பிகள் இருவர் சடலங்களாக மீட்பு!

### கிளிநொச்சியில் அதிர்ச்சிச் சம்பவம்

கிளிநொச்சி, ஒக். 17

கிளிநொச்சி, பெரியபரந்தனில் நண்பிகள் இருவர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்த நிலையில் சடலங்களாக

»11

## காதல் விவகாரம்; இளைஞன் சாவு!

யாழ்ப்பாணம், ஒக். 17

சிறுமியுடனான காதலால் ஏற்பட்ட நெருக்கடி மற்றும் அச்சம் காரணமாக இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

»11

வல்வெட்டித்துறையில்

## ஆணொருவர் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடிப் பகுதியில் தவறான முடிவு எடுத்து உயிரிழந்த ஆணின் சடலம் நேற்று திங்கட்கிழமை முற்பகல் மீட்கப்பட்டுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த இராம

»11

பிரான்ஸுக்கு பயணமான

## கிளிநொச்சிவாசி பெலாராஸில் சாவு!

### எல்லையோரத்தில் சடலம் மீட்பு

கிளிநொச்சி, ஒக். 17

பிரான்ஸுக்கு செல்வதற்கு சட்டவிரோத முகவரை நம்பிச் சென்ற கிளிநொச்சி, வட்டக்கச்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் பெலாரஸ் நாட்டின் எல்லையில்

»11

## கடையடைப்புக்கு ஒத்துழைப்புத் தாருங்கள்

வவுனியா, ஒக். 17

எதிர்வரும் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள கடையடைப்புக்கு வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தரப்புகளும் ஒத்துழைப்பை வழங்குமாறு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

»11

## காவலாளி சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 17

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வெளிப்புற மண்டபம் ஒன்றில் காவலாளியாக கடமையாற்றிய முதியவர் நேற்று திங்கட்கிழமை முற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாதகல் வடக்கு, மாதகலைச் சேர்ந்த சந்திரசேகரம் சச்சிதானந்தம் (வயது-71) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

»11

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக

## மோசடி செய்தவர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 17

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து இளைஞர்களிடம் 80 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்று ஏமாற்றிய ஒருவரை

»11

ஒரேநாளில் ரூ. 94 மில். பெறுமதியான

## பல்வேறு உயிர்கொல்லிகள் மன்னாரில் மீட்கப்பட்டன

மன்னார், ஒக். 17

இலங்கை கடற்படையால் தலைமன்னார், உறுமலை கடற்கரைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் மூலம் 4 கிலோவுக்கும் அதிகமான உயிர்கொல்லி ஐஸ், சுமார் 1 கிலோ உயிர்கொல்லி ஹெரோய்ன் மற்றும் 5 கிலோவுக்கும் அதிகமான உயிர்கொல்லி ஹாஷிஸ் போதைப் பொருள் என்பன நேற்று ஒரே நாளில் மீட்கப்பட்டுள்ளன.

உறுமலை கடற்கரைப் பகுதியில் நேற்று தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்தபோது

»11

## குடும்பப்பெண் சாவு!

### அவரைத் தானே தாக்கினேன் என கைதான கணவன் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், ஒக். 17

இளம் குடும்பப் பெண் ஒருவர் மயக்கமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், நேற்று உயிரிழந்துள்ளார்.

»11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்தல் ஒத்திவைப்புக்கு பெரமுன ஆதரவளிக்காது

## உத்தியோகபூர்வமான அறிவிப்பு

கொழும்பு, ஒக்.17

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான எந்தவொரு முயற்சிக்கும் தமது கட்சி ஆதரவு வழங்காது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி நேற்று அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

மொட்டுக் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அந்தக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்று தற்சமயம் சமூகத்தில் கருத்தாடல் இடம்பெறுகின்றது. அதனால் ஒரு விடயத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டாக வேண்டும். தேர்தலை ஒத்திவைப்பதற்கு நாம் ஒருபோதும் இணங்கமாட்டோம்.

கட்சியின் உறுதியான நிலைப்பாடு இதுதான். குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அல்லது அதற்கு முன்னதாக தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். ஏனெனில் தமக்கான ஆட்சி, பிரதிநிதித்துவத்தை தெரிவுசெய்யும் உரிமை மக்களுக்கு வழங்கப்படவேண்டும். எனவே தேர்தலை ஒத்திவைப்பதற்கு எந்தவிதத்திலும் எமது கட்சி செயற்படாது, ஒத்துழைப்பு வழங்காது- என்றார். (எ-44)

# ஜோர்தானுக்கு அனுப்பப்படும் இலங்கைப் பெண்கள்

கொழும்பு, ஒக்.17

இஸ்ரேல் எல்லையில் கைது செய்யப்பட்ட இலங்கைப் பெண்கள் இருவரும் மீண்டும் ஜோர்தானுக்கு அனுப்பப்படவுள்ளனர் என்று இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இரு நாள்களுக்கு முன்னர் ஜோர்தானில் இருந்து சட்டவிரோதமாக இஸ்ரேலுக்குள் நுழைந்த இலங்கைப் பெண்கள் இருவர் இஸ்ரேல் எல்லைப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் இருவரும் 44 மற்றும் 50 வயதுடையவர்கள் என்றும், அவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# தேர்தலைப் பிற்போட மேற்குலகம் ஆதரவு!

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.17

தேர்தல்களைப் பிற்போடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிகளுக்கு மேற்குலகம் ஆதரவளிக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல்களை பிற்போடும் ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு மேற்குலக நாடுகள் ஆதரவளிக்கும். இது அந்த ஒட்டுமொத்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாக காணப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஒன்பது பேர் மறைக்கப்பட்ட கதை என்றதனது நூலின் ஆங்கில ரஷ்ய மொழிபெயர்ப்பை வெளியிட்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாகாணசபை உள்ளூராட்சித் தேர்தல்களை காணாமல் ஆக்கியுள்ளார். ஜனாதிபதித் தேர்தல்கள் நாடாளுமன்றத் தேர்தல்களுக்கும் அவற்றைச் செய்வது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருக்கு முடியாத விடயமல்ல.

தேசிய தேர்தல்களைப் பிற்போடுவதற்கு ஏற்ற விதத்தில் வன்முறையான சூழல்ஒன்று உருவாக்கப்படலாம். மேற்குலகம் அதற்கு உதவலாம். வாக்காளர்களை தன்னால் கவரமுடியாது என்பதால் தேர்தல்களைப் பிற்போடுவது தொடர்பாக ஜனாதிபதி உறுதியாக உள்ளார்.

கோத்தபய ராஜபக்ச பதவிவிலகிய பின்னர் தன்னை (சபாநாயகரை) ஜனாதிபதியாக்க அமெரிக்கத் தூதுவர் முன்வந்தார் என்ற எனது குற்றச்சாட்டை சபாநாயகர் இன்னமும் மறுக்கவில்லை. இந்த நூல் வெளியிட்டபோது கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி நான் முன்வைத்த குற்றச்சாட்டுகள் இன்னமும் சவாலுக்கு உட்படுத்தப்படவில்லை.

ஜனாதிபதியின் எதேச்சதிகார நடவடிக்கைகளை எதிர்கொள்வது குறித்து நேர்மையான எதிர்க்கட்சிகள் பொது உடன்பாட்டுக்கு வராவிட்டால் நாடு மீளமுடியாத பலவீனமான பின்னடைவைச் சந்திக்க நேரிடும் - என்றார். (எ-இ)

# மருத்துவமனைகளில் எக்ஸ்-ரே நிறுத்தம்!

நாட்டில் உள்ள ஆறு மருத்துவமனைகளில் எக்ஸ்-ரே பரிசோதனைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று அரசாங்க கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் சானக தர்ம விக்கிரம மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது-

கிரிபத்கொட ஆதார மருத்துவமனை, மினுவாங்கொட ஆதார மருத்துவமனை, அஹலியகொட ஆதார மருத்துவமனை, பொரளை ஆயுள்வேத போதனா மருத்துவமனை மற்றும் மேலதிகமாக இரு மருத்துவமனைகளில் எக்ஸ்-ரே பரிசோதனைச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எக்ஸ்-ரே பரிசோதனை செய்யத் தேவையான பணியாளர்கள் இல்லாததே பிரதான காரணமாகும். கொழும்பு தேசிய மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவின் எக்ஸ்-ரே பரிசோதனைப் பிரிவு மூன்று வாரங்களாக செயலிழந்துள்ளது - என்றார். (எ-இ)

# ஐ.தே.க. விசேட சம்மேளனம் 21ஆம் திகதி

ஐக்கிய தேசியக் கட்சியின் 77ஆவது விசேட சம்மேளனம் கட்சித் தலைவர்ரணில்விக்கிரமசிங்க தலைமையில் எதிர்வரும் 21 ஆம் திகதி கொழும்பு, சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

அதில் கட்சிக்கான புதிய யாப்பு முன்வைக்கப்பட்டு, நிறைவேற்றப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

நாட்டில் உள்ள சிஸ்டம் மாறவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்தனர். போராட்டத்தின்போதும் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கமையவே கட்சி யாப்பு எதிர்காலத்துக்கு ஏற்ற வகையில் மாற்றப்பட்டுள்ளது.

சம்மேளனத்தில் 24 ஆயிரம் பேரை பங்கேற்கவைக்கத்திட்டமிட்டோம். எனினும், சீரற்ற கால நிலையால் பொதுவெளியில் மாநாட்டை நடத்தாமல் இருக்க முடிவெடுக்கப்பட்டது. எனவே, பங்கேற்பவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது-என்றார். (எ-44)

# ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, ஒக்.17

மலையகத்துக்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று ரயில் திணைக்களம் தெரிவித்தது.

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கடுகதி ரயில் நேற்று தடம்புரண்டதை அடுத்தே சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. (எ-இ)

# குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறது ஜே.வி.பி.

## மஹிந்தானந்த குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.17

விடுதலைப் புலிகளுக்கு இணையான பயங்கரவாத அமைப்பாகவே மக்கள் விடுதலை முன்னணி நாட்டுக்கு அழிவை ஏற்படுத்தியது. நாடு வழமைக்குத் திரும்பியுள்ள நிலையில் மக்களைக் குழப்பி மீண்டும் போராட்டத்தைத் தோற்றுவிக்க மக்கள் விடுதலை முன்னணியினர் முயற்சிக்கின்றனர்.

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் 2019 ஆம் ஆண்டு நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். கொரோனா பெருந்தொற்றால் அரசாங்கம் நெருக்கடிகளை எதிர்கொண்டது. இலங்கை இறக்குமதி பொருளாதாரத்தை மாத்திரம் நம்பியுள்ளதால் கொரோனா பெருந்தொற்றுத் தாக்கம் ஏனைய நாடுகளைக் காட்டிலும் இலங்கைக்கு நேரடியாகத் தாக்கம் செலுத்தியது. சுற்றுலாத்துறை சேவை, கைத்தொழில் வீழ்ச்சியடைந்ததால் வெளிநாட்டுக் கையிருப்பு பாதிக்கப்பட்டது. பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடி தீவிரமடைந்த சூழ்நிலையில் அரசமைப்பின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை இடைக்கால ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம். மாறுபட்ட அரசியல் கொள்கையைக் கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நாட்டுக்காக ஒன்றிணைந்து செயற்படுகிறோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைத் தொடர்ந்து நாடு தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது. மக்களைக் குழப்பி மீண்டும் போராட்டத்தைத் தோற்றுவிக்க மக்கள் விடுதலை முன்னணியினர் முயற்சிக்கின்றனர்.

மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும். தேர்தல் ஊடாகவே இனி ஆட்சிமாற்றம் ஏற்படுத்தப்படும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளக விசாரணையை புறக்கணிக்கும் ஐ.ம.ச.!

கொழும்பு, ஒக்.17

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் 'சனல் - 4' காணொலியில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இடம்பெறாது என அறியமுடிகின்றது.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடவுள்ளது. அதில் சபை முதல்வரும், அமைச்சருமான சுசில் பிரேமஜயந்தவால், தெரிவுக்குழு அமைப்பதற்கான யோசனை முன்வைக்கப்படவுள்ளது.

'சனல்-4' குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவொன்றும் விசாரணை முன்னெடுத்து வருகின்றது. அதேபோல நாடாளுமன்றத் தெரிவுக் குழுவும் அமைக்கப்படும் என ஜனாதிபதி அறிவித்திருந்தார். அதற்கமையவே இந்த நகர்வு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எனினும், உள்ளக விசாரணையில் நம்பிக்கை இல்லை என்பதால், சர்வதேசக் கண்காணிப்புடனான விசாரணையே அவசியம் என எதிர்க்கட்சி வலியுறுத்தி வருகின்றது. நாடாளுமன்றத் தெரிவுக்குழு காலத்தை வீணடிக்கும் செயல் என ஐக்கிய மக்கள் சக்தி ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளது. (எ-44)

# திறைசேரி உண்டியல்கள் ஏலம்

கொழும்பு, ஒக்.17

65 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் நாளை ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

91 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 30 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 20 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 15 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனை ஊடாக வழங்கப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (எ-இ)

# தயாசிறிக்கு மீண்டும்

## சுதந்திரக்கட்சியில் பதவி முரண்பாடு



கொழும்பு, ஒக்.17

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவுக்கு கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பதவியை வழங்கவேண்டும் என்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் யோசனை முன்வைத்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

தயாசிறி ஜயசேகர கட்சியுடன் இணைந்து பயணிக்க முன்வருவாரானால் தவிசாளர், செயலாளர், தேசிய அமைப்பாளர் ஆகிய பதவிகளைத் தவிர ஏனைய எந்தவொரு பதவியையும் வழங்குவதற்குத் தயார் என கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்திருந்தார். இதற்கமையவே சிரேஷ்ட உப தலைவர் பதவியை தயாசிறிக்கு வழங்க வேண்டும் என்று யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தற்போது சிரேஷ்ட உப தலைவர்களாக ஆறு பேர் செயற்பட்டுவருகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தற்சமயம் வெளிநாடு சென்றுள்ளார். அவர் நாடு திரும்பிய பின்னரே அடுத்த கட்ட நகர்வுகள் பற்றி முடிவெடுப்பார் எனத் தெரியவருகின்றது. சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறப்போவதில்லை என்ற உறுதியான அறிவிப்பை அவர் விடுத்துள்ளார். (எ-44)

# ஜனாதிபதி ரணிலுக்காக நான்கு பதில் அமைச்சர்கள்

கொழும்பு, ஒக்.17

ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க சீனாவுக்குப்பயணித்துள்ளநிலையில், ஜனாதிபதியின் கீழ் உள்ள அமைச்சுகளை மேற்பார்வை செய்வதற்காக இராஜாங்க அமைச்சர்களுக்கு பதில் அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும்வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் நியமிக்கப்பட்டுள்ளார். இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பிரதி நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர்களான கனக ஹேரத், தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பிரதி அமைச்சராகவும், அனுபா பாஸ்குவல் பெண்கள், சிறுவர் மற்றும் சமூக சேவைகள் பிரதி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். வனஜீவராசிகள்மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பதில்சுற்றாடல் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். சீனா சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு 4 நாள்கள் தங்கியிருப்பார். (எ-44)

# தினம் தெரியுமோ?

உடையவன் இல்லாட்டி ஒரு முழம் கட்டை எண்ட கதையா, உடையவை இல்லாததால கனபேருக்கு பயம் விட்டுப் போய், தறிகெட்டு அலையினம். அப்பிடி அலையிற கூட்டமொண்டு போன கிழமை யாழ்ப்பாணம் பஸ் ஸ்ராண்டுக்குள்ள அடிச்ச கூத்து பெரும் கூத்து. ஒரு நூறு நூற்றைம்பது பேர் திடீரெண்டு ஹெல்மெட்டும் போடாமல், ஊர்வலம் மாதிரி பஸ் ஸ்ராண்டுக்குள்ள ரவுண்ட் அடிச்சுப் போட்டு வந்து இறங்கிச்சினம். ஏற்கனவே முன்னுக்கு வந்த சிலதுகள், பனர் ஒண்டைக் கட்டி, அதுக்கு முன்னால பென்னாம் பெரிய கேக் ஒண்டை ரெடியா வைச்சிருந்தவை. இப்ப ஊர்வலமா வந்ததுகள் பெரிசா கத்திக் கூச்சல் போட, வருசக் கணக்கில சலூன் பக்கமே தலையைக் காட்டாத மாதிரி சடைமுடியோட ஒராள் வந்திச்சுது. முதல்ல சனம் அது ஆரோ பொம்பிளை எண்டுதான் நினைச்சதுகள். பிறகு பார்த்தால் ஆளுக்கு மீசை இருந்திருக்கு. 'ஒருவேளை ஆரோ திருநங்கையாக்கும். ஏதோ சாதிச்சதுக்கு இஞ்ச கௌரவிக்கினம் போல' எண்டுதான் சனம் அப்பவும் நினைச்சதுகள். ஆனால் அதுக்குப் பிறகுதான் அவைக்குத் தெரியும் அது 'டில்லு' எண்ட ஒரு தற்குறியாம்.

உந்த 'டில்லு' முந்தி வாள்வெட்டுக் கேஸ்களில தொடர்புள்ள ஆள். இப்ப வாள் வெட்டை விட்டிட்டு, கட்டப்பஞ்சாயத்து, வட்டிக்கு காசு குடுக்கிறது, வேலை வெட்டி இல்லாமல் திரியிறதுகளை தன்னோட கூட்டிக் கொண்டு திரிஞ்சு தண்ணி வெந்நி வாங்கிக் குடுக்கிறது எண்டு எப்பிடியெல்லாம் இளம்பெடியளைக் கெட்டுச் சீரழியவைக்க முடியுமோ, அவ்வளவு எளிய வேலையளையும் செய்யிற ஆள் தான் உந்த 'டில்லு'. அண்டைக்கு தனக்குப் பிறந்தநாள் எண்டு, 'டில்லு' தன்ர காசைக் குடுத்து 'பனர்' அடிப்பிச்சு, கேக் வாங்கியந்து, தன்ர வானரப்படையளோட பஸ் ஸ்ராண்டுக்குள்ள வந்து அந்த கேக்கை வெட்டிக் கொண்டாடயிருக்குது. ஆள் கேக் வெட்டுறதைப் பாக்க வந்த வானரப்படை நிக்க இடமில்லை எண்டு, பஸ் ஸ்ராண்டுக்க நிண்ட சீ.ரி.பி. பஸ்ஸுகளை அங்கால கொண்டு போகச் சொல்லி அதட்டி இருக்கினம். வேடிக்கை பார்த்த சனத்தையும் வெருட்டியடிச்சிருக்கிறாங்கள். முதல்ல பெர்மிசன் இல்லாமல் பஸ் ஸ்ராண்டுக்க வந்ததே குற்றம். அதவிட ஹெல்மெட் இல்லாம மோட்டார் சைக்கிளில வந்தது இன்னொரு குற்றம். வந்ததுகள் அங்க நிண்ட சனத்தை வெருட்டி, பஸ்ஸை எடுக்கச் சொல்லி சண்டை பிடிச்சதும், பொது அமைதிக்குப் பங்கம் விளைவிச்சதும் ஆகப்பெரிய குற்றம். இந்த வானரப்படைக்குள்ள யாழ்ப்பாணம் பஸ் ஸ்ராண்டைச் சுத்தி இருக்கிற பழக்கடையளிலையும், பேமண்டிலையும் வேலை செய்யிறதுகளும் அடக்கமாம்.

இப்பிடியெல்லாம் இந்த வானரப்படை கூத்தடிச்சுக் கொண்டு நிக்கேக்க, சனங்களும், சீ.ரி.பி. டிப்போக்காரரும் யாழ்ப்பாணம் பொலிஸுக்கு போன் பண்ணி தகவல் சொல்லி இருக்கினம். ஆனால் பொலிஸ் எட்டியும் பாக்கேலையாம். எப்பிடிப் பாப்பினம்? அவைக்கு குடுக்க வேண்டியதை 'டில்லுவும்' அதோட வந்ததுகளும் குடுத்திருக்குங்கள், அதால அவை நடக்கிறது நடக்கட்டும் எண்டு பேசாமல் இருந்திருக்கினம். பஸ் ஸ்ராண்டில செய்த காவாலித்தனத்தை 'கெத்து' எண்டு நினைச்சு அந்த வானரப்படை 'ரிக்ரொக்கில' வீடியோக்கள் போட்டிருக்கினம். அது 'போகவேண்டிய மேலிடத்துக்கு' போனதால,இப்ப எல்லாரையும் அள்ளிக்கொண்டந்து அடைக்கச் சொல்லி ஓர்டர் போடுப்பட்டிருக்கு. இதுகளுக்கெல்லாம் 'அவங்கள்' இருந்திருந்தால், இப்ப எல்லாரும் பங்கருக்குள்ள பச்சைமிளகாய் திண்டு கொண்டு இருந்திருப்பினம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயனின் பரிசுக்குவியல்



தென்னாபிரிக்கா- நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான இன்றைய (17.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ..............................................

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

தே.அ.இல : ..............................

தொ.இலக்கம் : ..............................

தினம் ஒரு பரிசு 13

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ..............................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

தே.அ.இல : ..............................

தொ.இலக்கம் : ..............................

மெகா பரிசு

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக (தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம்

தென்னாபிரிக்கா — நெதர்லாந்து

இடம் : தர்மசாலா

நேரம்: பி.ப. 2.00

# வெற்றிக்கணக்கை தொடங்கியது ஆஸி.



**இலங்கை அணியை ஐந்து இலக்குகள் வித்தியாசத்தில் எளிதில் வீழ்த்தி நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் முதல் வெற்றியை பதிவு செய்துள்ளது அவுஸ்திரேலியா.**

உலகக் கிண்ண கிரிக்கெட் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா, இலங்கை அணிகள் லக்னோவில் நேற்று மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 43.3பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 209 ஓட்டங்களை எடுத்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களைத் தவிர இலங்கை அணியில் மற்ற வீரர்கள் பெரிதாக விளையாடவில்லை.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களம் இறங்கிய குசல் பெரேரா மற்றும் பதும் நிசங்கா இணை 125 ஓட்டங்களைக் குவித்தது. இந்த இருவரையும் கும்மின்ஸ் ஆட்டமிழக்கச் செய்தார். நிசங்கா 61 ஓட்டங்களும், குசல் பெரேரா 78 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்து பிறகு இலங்கை அணியின் இலக்குகள் மளமளவென சரிந்தது. சீரான இடைவெளியில் இலக்குகளை இழந்ததால் 209 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. அவுஸ்திரேலிய அணி தரப்பில் அபாரமாக வீசி அடம் சம்பா 4 இலக்குகளைக் கைப்பற்றினார். 210 ஓட்டங்கள் என்ற இலக்கை துரத்திய அவுஸ்திரேலியாவுக்கு வோர்னர், ஸ்மித் ஏமாற்றினாலும் மிட்செல் மார்ஷ் சிறப்பான தொடக்கம் கொடுத்தார். அரைசதம் கடந்த அவர் 52 ஓட்டங்களில் 'ரன் அவுட்' ஆனார். இதன்பின் மார்னஸ் லபுசேன் மற்றும் ஜோஷ் இங்கிலிஸ் இணைப்பாட்டத்தை கட்டமைத்தனர். இதனால் அவுஸ்திரேலியா இலக்கை நோக்கி வேகமாக முன்னேறியது. லபுசேன் 40 ஓட்டங்களும், இங்கிலிஸ் 58 ஓட்டங்களும் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தனர்.

இதன்பின் மக்ஸ்வெல் அதிரடியாக விளையாட 88 பந்துகள் மீதமிருக்கையில் 5 இலக்குகள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றிபெற்றது. மக்ஸ்வெல் 31 ஓட்டங்களும், ஸ்டொய்னிஸ் 20 ஓட்டங்களும் எடுத்து இறுதிவரை களத்தில் இருந்தனர். இலங்கை தரப்பில் மதுசங்க அதிகபட்சமாக 3 இலக்குகளை வீழ்த்தினார்.

இந்த உலகக் கிண்ணத் தொடரின் முதலிரண்டு ஆட்டங்களிலும் தோல்வி யடைந்த அவுஸ்திரேலிய அணி தனது முதல் வெற்றியைப் பதிவு செய்தது. விளையாடிய மூன்று ஆட்டங்களிலும் இலங்கை அணி தோல்வியைத் தழுவியுள்ளது. (ஒ-5)

# நீண்ட தூர சிக்ஸர் விளாசுவதன் ரகசியம்!

## நடுவருக்கு ரோஹித் சர்மா பதில்

நீண்ட தூரத்துக்கு உங்களால் எப்படி சிக்ஸர் விளாச முடிகிறது என்று நடுவர் கேட்ட கேள்விக்கு இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா சுவாரஸ்யமான முறையில் பதில் அளித்துள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான் அணிகள் கடந்த சனிக்கிழமை மோதின.

இந்த ஆட்டத்தில் ரோஹித் சர்மா சிக்ஸர் மழை பொழிந்திருந்தார். அதைப் பார்த்து வியந்த கள நடுவர் மராயிஸ் எராஸ்மஸ், ரோஹித் சர்மாவிடம் வந்து, 'உங்களால் எப்படி நீண்ட தூரத்துக்கு சிக்ஸரை விளாச முடிகிறது. பெரிய அளவில் சிக்ஸர்களை பறக்க விடுகிறீர்கள். இதில் உள்ள ரகசியம் என்ன... நீண்ட தூரம் சிக்ஸர் விளாசுவதற்கு உங்களின் துடுப்புமட்டையில் ஏதோ சக்தி இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்' என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

இதற்கு ரோஹித், 'அந்த ரகசியம் இதுதான். நீண்ட தூரம் சிக்ஸர் அடிப்பதற்கான சக்தி எனது துடுப்பில் இல்லை. எனது கைகளில்தான் உள்ளது' என்று நடுவரிடம் தனது கைகளின் வலிமையைக் காட்டினார். இதைப் பார்த்த ரசிகர்கள் ஆரவாரத்தில் துள்ளிக் குதித்தனர். (ஒ-5)

## தினம் ஒரு பரிசு நாள் 11 இன் வெற்றியாளர்கள்

| | | |
|---|---|---|
| பி.அபிநயன் | - | யாழ்ப்பாணம் |
| வ.தயாதீசன் | - | வண்ணார்பண்ணை |

**தினம் ஒரு பரிசு 11 இற்கு இருவர் மாத்திரமே சரியான விடை எழுதியுள்ளனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நாளொரு நல்வார்த்தை

கிழிந்த புத்தகத்தில் கூட
நீ உயர்ந்து வாழ
ஒருசில வரிகள் இருக்கும்
ஒருமுறையேனும் படித்துப் பார்.
– குட்டிக் கவிஞன் –

## பத்து வீதப் பகற்கொள்ளை!

யாழ்ப்பாணத்திலுள்ள சந்தைகளில் விவசாயிகளிடமிருந்து பத்துவீதக் கழிவுபெறும் நடைமுறை உடனடியாகக் கைவிடப்படவேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கின்றார் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர. அவ்வாறு வலுக்கட்டாயமாக எவராவது விவசாயிகளை அச்சுறுத்தி 10 வீதக் கழிவைப் பெற்றால் அவர்களைக் கைதுசெய்யவும் அவர் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருக்கின்றார். யாழ்ப்பாணம் மாவட்ட விவசாய மீளாய்வுக் கூட்டத்தில் இந்த விடயம் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டமையும் அதன் தொடர்ச்சியாக இவ்வாறான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளமையும் உண்மையில் பாராட்டப்படவேண்டியவையே. அதில் மறுவிவாதமொன்று இல்லை.

ஆனால், இந்த 10 வீத விலைக்கழிவு நடைமுறை தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்ட முதலாவது கூட்டம் இதுவல்ல. அதேநேரம், இந்த விடயத்தில் மேற்படி கலந்துரையாடல்கள் இறுதியானவையும் அல்ல. யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களின்போதும் இதரபல மீளாய்வுகளின் போதும் இந்தப் 10 வீத பகற்கொள்ளை தொடர்பில் ஒன்றுக்குப் பலமுறை விவாதித்துள்ளனர் – பரிசீலித்துள்ளனர் இந்த முறைமை நிறுத்தப்படவேண்டும் என ஏகமனதாகத் தீர்மானமெடுத்தும் உள்ளனர். விவசாய அமைச்சரிடமும் இதே பிரச்சினை முறையிடப்படுகின்றது என்றால், இதற்கு முன்னர் இந்த விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனைகள் மற்றும் தீர்மானங்களின் இயலுமை என்ன? அந்தத் தீர்மானங்கள் ஏன் செயலுருப்பெறவில்லை? என்ற கேள்விகளைக் கேட்க வேண்டியிருக்கின்றதல்லவா?

இலங்கையில் இன்று ஆகப்பெரும் சுமையான, மனவழுத்தத்தை உண்டுபண்ணக்கூடிய, போட்ட முதல் கூட திரும்பி வராத தொழிலாக விவசாயம் மாறியிருக்கின்றது. கோத்தாபய ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இரசாயன உரங்களுக்குத் தடைவிதித்து மேற்கொள்ளப்பட்ட விஷப்பரீட்சையில் ஆரம்பித்து அதற்கடுத்த பொருளாதார நெருக்கடிகளின்போது விவசாயம் தாறுமாறாகப் பந்தாடப்பட்டது. மழையால் ஏற்பட்ட பயிரழிவு, வெயிலால் ஏற்பட்ட உற்பத்தியிழப்பு என்பனவும் வெந்த புண்ணில் வேலாக விவசாயிகள் நொந்துநூலாகக் காரணமாகியிருக்கின்றன. எல்–நினோ தாக்கத்தால் இந்த வருடமும் விவசாயத்துறை அழிவின் நுனியில் தொங்கிக்கொண்டிருக்கின்றது. இவ்வளவற்றையும் எதிர்கொண்டு ஒரு பயிரை விளைவித்து அதை விற்பனைக்காகக் கொண்டுசெல்கையில் அங்கு 10 வீதத்தை விற்பனைக் கழிவாகப் பிடித்துக்கொள்வதென்பது தகுமா? குறைந்தபட்ச மனச்சாட்சியுள்ளவன் கூட செயற்படுத்த விரும்பாத செயல்கள் இவை.

எந்த நாட்டில் விவசாயிகளின் நலன் பேணப்படுகின்றதோ அந்தநாடுதான் வாழும் வளரும். மேற்குலக நாடுகளில் விவசாயிகளின் பிரச்சினைகள் போர்க்கால அடிப்படையில் தீர்க்கப்படுகின்றன. உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்தும் விடயத்தில் அரசாங்கத்தின் நியாயமான தலையீடு இருப்பதால் சந்தைப்படுத்தலில் அவர்கள் சிரமங்களை எதிர்கொள்வதேயில்லை. இலங்கை அரசாங்கத்திடம் அந்த இயலுமை இல்லாவிட்டாலும், குறைந்தபட்சம் இடைத்தரகர்களிடமிருந்தாவது விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும். இப்போது விவசாயிகளைப் பாதுகாக்கத் தவறிவிட்டு, அவர்கள் விவசாயத்தையே விட்டகன்ற பின்னர் தன்னிறைவு காணவேண்டிய உற்பத்திகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவேண்டிய கையாலாகாத்தனம் நாட்டை அதலபாதாளத்துக்குள்தான் கொண்டு செல்லும்.



# பலஸ்தீனத்துடன் வம்பிழுத்து சிக்கலில் சிக்கக்கூடாது அரசு

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவுரை

**கொழும்பு, ஒக்.17**

**பலஸ்தீன் - இஸ்ரேல் போரை முன்னிலைப்படுத்தி ஒரு தரப்பினர் இலங்கையில் பலஸ்தீனம் தொடர்பாகத் தவறான சித்தரிப்புகளை சமூகமயப்படுத்த முயற்சிக்கிறார்கள். இவ்வாறான செயற்பாடுகள் தீவிரமடைந்தால் மத்திய கிழக்கு நாடுகளில் வாழும் பல்லாயிரம் இலங்கைப் பணியாளர்கள் பாதிக்கப்படுவார்கள். இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்படவேண்டும்.** ——

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை பலவீனமடைந்துள்ளது. முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அறிமுகப்படுத்திய பிளவுபடாத வெளிவிவகாரக் கொள்கைக்கு சகல அரசியல் கட்சிகளும் இணக்கம் தெரிவித்தன. அதேபோன்று சர்வதேச மட்டத்திலும் சிறந்த அங்கீகாரம் கிடைத்தது.

பொருளாதாரப் பாதிப்பின் பின்னர் இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை பலவீனமடைந்துள்ளதை பல சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. சீனாவின் கப்பல் விவகாரம் பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. கடந்த வாரம் இலங்கைக்கு வந்த இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சீன விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சில் ஈடுபட்டுள்ளார். ஒரு சில விடயங்கள் மற்றும் தீர்மானம் தொடர்பாக அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

சீனக் கப்பல் வருகை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தூரநோக்குச் சிந்தனையுடன் ஒரு தீர்மானம் எடுப்பார் என்று எதிர்பார்க்கிறோம். சீனக் கப்பல் விவகாரத்தில் இலங்கை மற்றும் இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்மானம் எடுப்பது அத்தியாவசியமானது.

பலஸ்தீன் - இஸ்ரேல் போர் பூகோள மட்டத்தில் நிச்சயம் தாக்கம் செலுத்தும். இலங்கைக்கும் மறைமுகமான தாக்கங்கள் ஏற்படும். பலஸ்தீனம் தொடர்பில் இலங்கையில் தவறான சித்திரிப்புகள் முன்னெடுக்கப்படும் போது அது இலங்கைத் தொழிலாளர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் பொருளாதாரமும் பாதிக்கப்படும் - என்றார். (எ-இ)

# சுகாதார அமைச்சின் செயலர் பதவிக்கு கடுமையான போட்டி

சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த, அடுத்த மாதம் ஓய்வு பெறவுள்ளதால் சுகாதார செயலாளர் பதவிக்கு கடும் போட்டி உருவாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் மருத்துவர் சமன் ரத்நாயக்கவுக்கும் மேலதிக செயலாளர் லக்ஷ்மி சோமதுங்கவுக்கும் இடையில் இந்த போட்டி உருவாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை, சுகாதாரச் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த இன்னும் ஒரு வருடம் அந்தப் பதவியில் நீடிக்க முயற்சிக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

சுகாதார அமைச்சின் செயலாளர் பதவிக்கு மருத்துவர்களான முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், சுற்றாடல் அமைச்சின் செயலாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க, முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் பாலித மஹிபால ஆகியோரின் பெயர்கள் குழுவால் முன்மொழியப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ–இ)

## நாளை

18.10.2023
புதன்கிழமை
ஐப்பசி 01

சுபநேரம் : 04.32 – 06.02
ராகுகாலம் : 12.02 – 01.32

சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விவசாயிகளுக்கு இழப்பீடு முல்லைத்தீவில் ஆரம்பம்

முல்லைத்தீவு, ஒக்.17

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயிகளுக்கான இழப்பீடு வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆரம்ப நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் பங்கேற்பில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

முதற்கட்டமாக முல்லைத்தீவின் 16 விவசாயிகளுக்கு விவசாய அமைச்சர் இழப்பீட்டுக்கான காசோலைகளைக் கையளித்தார். (ச-19)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக் 17

ஓய்வு நிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா எழுதிய "இலங்கை சுதந்திரம் அடைந்த பின் கல்வித் துறையில் ஏற்பட்ட விரிவாக்கம் ஓர் ஆய்வு 1505 - 1980" என்ற நூல் வெளியீடு எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி சு.பரமானந்தம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.யோன் குயின்ரஸும், நூல் மதிப்பீட்டுரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியற் துறைத் தலைவர் கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகமும், வாழ்த்துரையை ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதனும், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலனும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ச.லலீசனும் ஆற்றவுள்ளனர். (ய)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் இனந்தெரியாத சின்னச் சின்னக் கவலைகள் வந்துபோகும். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

**இடபம்:** குடும்பத்தினருடன் வீண் வாக்கு வாதம் வந்துபோகும். உடல்நலத்தில் கவனம் தேவை. பழைய கடன் பிரச்சினை அவ்வப்போது மனசைவாட்டும். உறவினர்களுடன் பகைமை வந்து செல்லும்.

**மிதுனம்:** குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்திசெய்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்கநேரிடும்.

**கடகம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளைக் கையாளுவீர்கள்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி:** சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து நீங்கும். வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப்போங்கள். சிலவிஷயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது.

**துலாம்:** எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் அமைவார்கள். நன்மை கிட்டும் நாள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வெளியூரிலிருந்து நல்ல செய்திவரும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும்.

**தனுசு:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மகரம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரைச் சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**கும்பம்:** சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**மீனம்:** கணவன்-மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். சில முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். பணப்புழக்கம் கணிசமாக உயரும். அழகும் இளமையும் கூடும். நவீன மின்னணுச் சாதனங்கள் வாங்குவீர்கள்.

# வலுவான சிவில் கட்டமைப்பு உருவாக்கப்படுவது அவசியம்

## ஐங்கரநேசன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 17

தமிழ்த்தேசிய இனத்தின் அரசியலை மாத்திரம் அபிலாஷையாகக் கொண்ட தேர்தல் அரசியலில் நாங்கள் ஈடுபடமாட்டோம், கட்சி அரசியலில் பாரபட்சம் காட்டமாட்டோம் என்று சொல்லக் கூடிய எங்களுடைய பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை இணைத்துக்கொண்டு ஒரு வலுவான சிவில் சமூகக் கட்டமைப்பைத் தமிழ் சிவில் செயற்பாட்டாளர்கள் இணைந்து உருவாக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் சமகால அரசியல் உரையரங்கு நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்மக்களின் கதி இதுதானா? மாறவேண்டும். மாற்ற வேண்டும். அந்த மாற்றம் யாரால் நிகழும்? தற்போது செயற்பட்டு வரும் எந்தவொரு அரசியல் கட்சியாலும், அரசியல் கட்சிகளின் தலைவர்களாலும் ஆக்கபூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தமுடியாது.

சிவில் சமூக அமைப்பில் பதவி வகிக்கும் ஒருவருக்கு அந்த அமைப்பின் மூலம் பிரபல்யம் கிடைத்து விட்டால் அவர் நேரடியாக அரசியலுக்கு வந்து விடுகிறார். அல்லது சிவில் அமைப்புகள் கட்சிகளின் பினாமிகளாகச் செயற்படுகின்றன. அரசியல் பத்தி எழுத்தாளர்களில் கூட ஏதோவொரு அரசியல் கட்சியில் வேட்பாளர்களாகப் போட்டியிட்டவர்கள் இருக்கிறார்கள். இவர்களால் தாங்கள் சார்ந்த கட்சிகளுக்கு விரோதமாக ஒரு கருத்தைப் பத்திரிகையில் முன்வைக்க முடியுமா? நிச்சயமாக முடியாது.

நாங்கள் ஆயுதங்களை ஏன் கைவிட்டோமென இன்று கவலைப்படுகின்றோமென தமிழ்த்தேசியக் கட்சியொன்றின் தலைவரொருவர் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார். துண்டையும், துணியையும் காணோமென்று மக்களை விட்டுவிட்டு ஓடியவர்கள்தான் இன்று இவ்வாறு கூறுகின்றார்கள். இவர்கள் எங்களுக்கு மீட்பர்களா? இவர்கள் எங்களுக்கு ஏதாவது பெற்றுத் தருவார்கள் என்று நீங்கள் நம்புகின்றீர்களா? இது தமிழ் மக்களையும் ஏமாற்றி மாறிமாறி ஆட்சிக்கு வரும் அரசாங்கங்களுக்குத் தங்களின் ஒவ்வொரு முகங்களையும் காட்டித் தங்களை வளர்த்துக் கொள்ளுகின்றதொரு யுக்தி - என்றார். (ம-66)

# மீலாதுன் நபி விழா மன்னாரில் 22 இல்

மன்னார், ஒக்.17

மன்னாரில் நடைபெற இருக்கும் 39 ஆவது தேசிய மீலாதுன் நபி நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளார்.

இதற்கான முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல் புத்தசாசன சமய விவகாரங்கள் மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க, பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோரின் பங்கேற்பில் கடந்த வியாழக்கிழமை முசலி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே மீலாதுன் நபி நிகழ்வை இந்தமாதம் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. (ச-60)



# யாழ். விவசாயிகளுக்கு பயிரழிவுக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஒக்.17

இந்த ஆண்டுக்கான விவசாயச் செய்கையில் பாதிக்கப்பட்ட யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு இழப்பு வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் அ. சிவபாலசுந்தரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பங்கேற்று 40 விவசாயிகளுக்கு முதற்கட்டமாக வழங்கி வைத்தார். விவசாய ஓய்வூதியக்கொடுப்பனவுக்காக 5 விவசாயிகள் புதிதாக இணைத்துக் கொள்ளப் பட்டனர்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, பிரதேச செயலர்கள், துறை சார் திணைக்களத் தலைவர்கள், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

கல்வளை வீதி, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணத்தில் வதியும் **ஜோவின் மரிய லிவிசன்** ஆகிய நான் எனது பெயரை டேவிட் லிவிசன் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **டேவிட் லிவிசன்** என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**டேவிட் லிவிசன்**

# அறிவித்தல்

### பார்வையற்றவர்கள் மீது அக்கறையோடு வாழ்ந்து வருகின்ற பாசமிகு உறவுகளே வணக்கம்

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தால் பார்வையற்றவர்களின் கல்வி முதலான பன்முகப் பணிகளுக்காக ஆண்டுதோறும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அதிஸ்ட இலாபச் சீட்டிழுப்பு செயல்திட்டமானது இந்த ஆண்டும் **15.10.2023** அன்று அதிஸ்டம் பார்க்கும் கால எல்லையாக விற்பனை செய்யப்பட்டு வந்தது ஆயினும் எம்மால் எமது சமூகப்பணிக்காக எதிர்பார்த்த வருமானத்தை அடையும் வகையில் அதிஸ்ட இலாபச் சீட்டுக்களை விற்பனை செய்ய முடியாமையாலும் பெரும் செலவில் எமக்கு அதிஸ்ட இலாபச்சீட்டுப் புத்தகங்களை அச்சிட்டுத் தந்த நன்கொடையாளரின் விருப்பத்திற்கு அமையவும் ஆர்வத்தோடு எமது நிறுவனத்துக்கான வருவாய் ஈட்டுவதற்காக அதிஸ்ட இலாபச்சீட்டுக்களை விற்பனை செய்யும் பொதுச்சபை உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு அமையவும் இன்னும் பார்வையற்றவர்களை நேசிக்கின்ற உறவுகள் பலர் அதிஸ்ட இலாபச்சீட்டு விற்பனையின் ஊடாக எமக்கு உதவி செய்ய காத்திருப்பதை உணர்ந்தும் **இவ் அதிஸ்ட இலாபச்சீட்டின் அதிஸ்ட இலாபம் பார்க்கும் காலம் 03.12.2023 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு தெரியப்படுத்துகிறோம்.** எனவே எமக்கு உதவி செய்து அதிஸ்டத்தை எதிர்பார்த்திருக்கும் உறவுகளே எம்மிடம் அதிஸ்ட சீட்டுக்களைப் பெற்று எமக்கு உதவி செய்ய காத்திருக்கும் உறவுகளே கண்ணிழந்தவர்களின் கண்ணீர் துடைக்கும் பணிக்கு நிதியீட்டும் எமது முயற்சிக்கு தாங்கள் வழங்கிய ஒத்துழைப்பிற்கும் வழங்கி வருகின்ற ஒத்தழைப்பிற்கும் வழங்கவிருக்கின்ற ஒத்துழைப்பிற்கும் எமது நிறுவனத்தின் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தொரிவித்து நிற்கிறோம் தொடர்ந்தும் பார்வையற்றவர்களின் கௌரவமிக்க சுயவாழ்வ விருத்தி என்ற தொனிப் பொருளோடு இணைந்திருங்கள் அதிஸ்டம் சிலருக்கும் பார்வை அற்றவர்களின் அன்பு பலருக்கும் வீடுதேடி வருவதை **05.12.2023** அன்று அனைத்து பத்திரிகைகளிலும் காணலாம்.

### யாழ். விழிப்புலனற்றோர் சங்கம்

**இல.28, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.**

(cr. 26604) (N.1)

## 07ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 26 . 05 . 1932

இறப்பு 04 . 10 . 2016

### அமரர் கார்த்தி சுப்பிரமணியம்

(ஓய்வுநிலை எழுதுவிளைஞர், யா/சா.றிபே. கல்லூரி)

**திதி:பிரிதமை வளர்பிறை**

ஆண்டுகள் கடந்து போகலாம்
உங்கள் நினைவுகள் எங்கள்
மனங்களை விட்டுப் போகாது.
என்றும் உங்கள் நினைவுடன்...

**குடும்பத்தினர்.**

(CR 40785) A-1

## மரண அறிவித்தல்

### தனபாலசிங்கம் சந்திரவதி

ஏழாலை வடக்கை பிறப்பிடமாகவும், 127/15, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் சந்திரவதி அவர்கள் 15.10.2023 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தையா அன்னம்மா தம்பதிகளின் பாசமிகு புதல்வியும், மற்றும் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம் நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தனபாலசிங்கம் (ஓய்வுபெற்ற மருந்தாளர்) அவர்களின் பாசமிகு மனைவியும், கெங்காதரன் (உயிரியல் ஆசிரியர்), வசந்தரோஜா (கௌரி, கனடா), சுமதி (கனடா), சுகிர்தா (சுவிஸ்), கிருபாகரன் (மக்கள் வங்கி, சங்கானை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், குமுதினி, இன்பநாதன் (கனடா), சிறீரங்கன் (கனடா), ரகுமார் (சுவிஸ்), ஞானவசந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும் சுகன்யா பிரதீபன் (பிரான்ஸ்), கீர்த்திகா அகிலன் (அவுஸ்திரேலியா), லக்சிகா டினேஸ் (கனடா), சகானா ராஜன் (கனடா).ஆதவன் (கனடா), பிரவீன் சாதனா (கனடா), மதுசகன் (கனடா), றெனூசன் ஜஸ்மின் (சுவிஸ்), யானுயன் (சுவிஸ்), பானுயன் (சுவிஸ்), கோபிசன், ஹருசனன், பிருந்திகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பிரகஸ்தி, லிசானா, ஆருஷ், ஆதவ், நைரா, ரிஷான், ஆனவ், செலினா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புதன்கிழமை (18.10.2023) நண்பகல் 12.00 மணியளவில் 127/15, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஏழாலையில் உள்ள உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்.உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுனக்கொள்ளவும்.


**தகவல்:**

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

**கெங்காதரன் (மகன்) 0777 225 709**
**கிருபாகரன் (மகன்) 077 1700 101**

(CS 26630) A-1

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 27 . 03 . 1960

விண்ணில் 09 . 10 . 2021

அமரர்

### குழந்தைவேலு குணானந்தசீலன் (சீலன்)

(உரிமையாளர் - Seelan Lorry Body Builders, R.M.K.Transport (காளி அம்மன்))

*கண்முன்னே வாழ்ந்த காலம்*
*கனவாகிப் போனாலும்*
*எம் முன்னே உங்கள் முகம்*
*எந்நாளும் உயிர் வாழும்*
*மண் விட்டு மறைந்த நீங்கள்*
*விண்ணோக்கிச் சென்றாலும்*
*கண் விட்டு மறையாமல்*
*கன காலம் இருப்பீர்கள்...*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன்...

**குடும்பத்தினர்.**

**"குணாலயம்"**
**10, சாரதா வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

(CR 40786) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 09 . 04 . 1937

மறைவு 15 . 10 . 2023

### சுப்பிரமணியம் பராசக்தி

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பராசக்தி கடந்த (15.10.2023) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் இராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, மங்கையற்கரசி, பாக்கியரத்தினம் மற்றும் அன்னரத்தினம் ஆகியோரின் சகோதரியும், சந்திராதேவி, ரவிமோகன் (பிரான்ஸ்), சித்திராதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினகுமாரன், ரஞ்சினிதேவி (பிரான்ஸ்), கணேசமூர்த்தி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், சுதர்சன் (பிரான்ஸ்), சுபாசினி (கனடா), தாட்சாயினி (பிரான்ஸ்), தர்சன் (பிரான்ஸ்), தனுஷா (பிரான்ஸ்), கவிதா (லண்டன்), கங்கா (லண்டன்), வினிதா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், ஓவியா, டியன் (கனடா), அக்ஷரா, ஆராதனா (பிரான்ஸ்), ஹெலனா (பிரான்ஸ்), சியான் (பிரான்ஸ்), தவ்யன் (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2023) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**மஞ்சவனப்பதி லேன்,**
**கொக்குவில் மேற்கு.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 26636) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம்மொழி இலவசக் கருத்தரங்கு

கிளிநொச்சி, ஒக்.17

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான இரண்டாம் மொழி இலவசக் கருத்தரங்கு கடந்த சனிக்கிழமை வரணி நூலகத்தில் நூலகர் சி.ஜெயக்காந்தன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

வரணி நூலக அபிவிருத்திச்சபை உறுப்பினரான ஆசிரியர் செ. நவரத்தினசாமி வளவாளராக பங்கேற்றார். இதன்போது மாணவர்களுக்கு ஆங்கிலம் மற்றும் சிங்கள பாடங்கள் குறித்து தெளிவூட்டப்பட்டது. (ச-159)

# குருதிக்கொடை



லயன்ஸ் கிளப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்தவங்கியின் அனுசரணையில் வருடாந்தக் குருதிக்கொடை முகாம் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரியகுளம் முற்போக்கு வாலிபர் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. (ச-66)

## தமிழரசுக்கட்சியின்

# கோப்பாய்த் தொகுதி நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஒக்.17


இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் கோப்பாய்த் தொகுதிக் கிளையின் நிர்வாகத் தெரிவு கடந்த சனிக்கிழமை நீர்வேலியில் நடைபெற்றது.

வாக்கெடுப்பில் வெற்றிபெற்று தொகுதிக் கிளைத் தலைவராக வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் முன்னாள் உப தவிசாளர் ம.கபிலன் தெரிவானார்.

செயலாளராக அ.பரஞ்சோதி, பொருளாளராக கஜேந்திரகுமார் ,உப தலைவராக அ.கமலறேகன், உப செயலாளராக கலைமோகன் மற்றும் 3 பெண்கள் உட்பட 10 நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அண் மட்டக்களப்பு மாவட்டத்தின் கட்சியின் மூத்த தலைவர் செல்வராஜாவுக்கு கூட்டத்தில் அகவணக்கம் செலுத்தப்பட்டது. இதில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பொருளாளர் கனகசபாபதி, சி.வீ.கே.சிவஞானம், எக்ஸ்.குலநாயகம் ஆகியோர் பங்குபற்றினர். (ச-27)

# வல்லிபுர ஆழ்வாரில் புரட்டாதி ஞாயிறு



யாழ்ப்பாணம், ஒக்.17

வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான புரட்டாதி ஞாயிறு உற்சவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து வல்லிபுரத்தாழ்வார் தண்டிகை வாகனத்தில் வீற்றிருந்து உள்வீதிஊடாக வலம் வந்து அருள் பாலித்தார். (ச-27)

# நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரை இடும் பணி

யாழ்ப்பாணம், ஒக்.17

வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாவிக்கப்படும் நிறுத்தல் அளவை மற்றும் நிறுத்தல் கருவிகளுக்கான முத்திரை இடும்பணி எதிர்வரும் 23 ஆம் ,24 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளது.

வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற மரக்கறிப் பொதுச் சந்தை வளாகத்தில் இடம்பெறவுள்ள முத்திரையிடும் பணி இரு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை இடம்பெறும் என வல்வெட்டித்துறை நகராட்சி மன்றச் செயலாளர் திருமதி த.நிதர்ஷன் அறிவித்துள்ளார். (எ-100)





கிளிநொச்சி அரசதிணைக்கள அலுவலர்களுக்கிடையிலான அரச அதிபர் கிண்ண விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (ச-9)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக்.17

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் ச. முகுந்தன் "சைவ வாழ்வியலில் சக்தி வழிபாடு"என்னும் தொனிப்பொருளில் ஆற்றவுள்ளார்.

சொற்பொழிவிலிருந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். (ய)

# யாழில் சிறுவர், முதியோர் நிகழ்வுகள்





யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்.மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் சிறுவர், முதியோர் மற்றும் மாற்றாற்றலுடையோர் தின நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட பழைய செயலக கட்டடத்தில் யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் நடைபெற்றது.

'எல்லாவற்றையும் விடப் பிள்ளைகள் பெறுமதியானவர்கள்' எனும் தொனிப் பொருளில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் சிறுவர், முதியோர் மற்றும் மாற்றாற்றலுடையவர்களின் பேச்சு, குழு நடனம், பாடல், நடனம், கவிதை போன்ற சிறப்புக் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. (ச-66)

# கௌரவிப்பு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலாசாலையிலுள்ள யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக ஆன்மிகப் பணியைச் சிறப்பாகச் செய்துவருகின்ற இருபாலை சிவஸ்ரீ பா.செல்வசேனக் குருக்கள் கடந்த 11 ஆம் திகதி புதன்கிழமை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவால் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த தேர்தலில் இருமுனை போட்டி

## கூறுகின்றார் ராஜித



கொழும்பு, ஒக்.17

**அடுத்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கும், தேசிய மக்கள் சக்திக்கும் இடையேதான் போட்டி காணப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய மக்கள் சக்திக்குதான் மக்கள் மத்தியில் சிறந்த கேள்வி உள்ளது. அடுத்த இடத்தில் ஜே.வி.பி. (தேசிய மக்கள் சக்தி) இருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்பன பட்டியலில் இல்லை. அதனால் இரு முனைப்போட்டிதான் காணப்படும்.

சுகாதார அமைச்சை மீளக்கட்டியெழுப்ப முடியும். சிறந்த அரசியல் வேலைத்திட்டமொன்று இருந்தால் சுகாதார அமைச்சை மட்டுமல்ல எல்லாத் துறைகளையும் கட்டியெழுப்பலாம் - என்றார். (எ-44)



## பரத நாட்டியப் போட்டி:

# நடேஸ்வராக் கல்லூரி தேசியத்துக்கு தெரிவு

யாழ்ப்பாணம், ஒக். 17

அகில இலங்கை பரத நாட்டிய போட்டியில் நடேஸ்வராக் கல்லூரி மாணவர்கள் வெற்றிபெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

கல்வி அமைச்சால் நடத்தப்படுகின்ற அகில இலங்கை பரத நாட்டிய போட்டியின் மாகாண மட்டப் போட்டிகள் பளை மத்திய கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இதில் சிரேஷ்ட பிரிவு - 2 இல் ஆண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தையும், சிரேஷ்ட பிரிவு - 2 இல் பெண்களுக்கான குழு நிலை போட்டியில் 2 ஆவது இடத்தையும் பெற்று நடேஸ்வராக் கல்லூரி மாணவர்கள் தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர். (ச-100)

# வேலைவாய்ப்பு மோசடி: ஒருவர் கைது

கொழும்பு, ஒக்.17

இணையம் மூலம் வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படும் என்று தெரிவித்து சுமார் ஒரு கோடி ரூபாவரை மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கரந்தெனிய, தெனகொட பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் 94 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாவை மோசடி செய்துள்ளார் என்று முதற்கட்ட விசாரணையின் மூலம் தகவல் வெளியாகியுள்ளது.

கைது செய்யப்பட்ட நபரின் 3 வங்கிக்கணக்குகளில் 72 இலட்சம் ரூபா பணம் காணப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ-இ)

# யாழ்ப்பாண விவசாயிகளுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய்

## விவசாய அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்குவதற்கான முன்மொழிவு அடுத்த ஆண்டுப் பாதீட்டில் சமர்ப்பிக்கப்படும் என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட விவசாய மீளாய்வுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இ. அங்கஜன் முன்வைத்த கோரிக்கையை அடுத்தே விவசாய அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கிணறுகளை நம்பியே விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சிறுபோக பயிர்செய்கைக்கான மண்ணெண்ணெயில் இயங்கும் நீர்ப்பம்பிகளை விவசாயிகள் காலங்காலமாகப் பயன்படுத்தி வருகிறார்கள்.

தற்போதைய எரிபொருள் விலையேற்றத்தாலும், கடந்தாண்டு ஏற்பட்ட நெருக்கடி நிலையிலும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுவது போன்று யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்கும் மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை முன்வைத்தார்.

அதையடுத்து விவசாயிகளுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்குவதற்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்படும் என்று விவசாய அமைச்சர் தெரிவித்தார். (எ-27)



# யாழ். பொதுநூலகத்தில் அப்துல்கலாம் ஜனனதினம்

யாழ்ப்பாணம், ஒக்.17

இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாமின் 92ஆவது பிறந்ததின நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பொதுநூலகத்தில் நடைபெற்றது.

அவரது சிலைக்கு யாழ்ப்பாணம் இந்திய துணை தூதரகத்தின் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் ஜெயசீலன், தலைமை நூலகர், நூலக அதிகாரிகள் மற்றும் தூதரக அதிகாரிகளும் மலரஞ்சலி செலுத்தினர். (ச-27)




*மன்னார் புனித செபஸ்தியார் முன்பள்ளிச் சிறுவர்களுக்கு மன்னார் றோட்டரிக் கழகத்தின் நிதிப்பங்களிப்பில் சீருடை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ச-213)*



# புல்லாங்குழல், பல்லிய இசை கன்னியர்மடம் தேசியத்துக்கு

யாழ்ப்பாணம், ஒக். 17

அகில இலங்கை கர்நாடக சங்கீதப் போட்டியில் திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளது.

கிளிநொச்சி - பூநகரி மகா வித்தியாலயத்தில் இந்தப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன.

இதில் புல்லாங்குழல் தனி மற்றும் பல்லிய இசை ஆகிய போட்டியில் மாகாண மட்டத்தில் முதலிடங்களைப் பெற்று திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை மாணவிகள் தேசிய மட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலியாட்டத்தில் யாழ். இந்து முதலிடம்

யாழ்ப்பாணம், ஒக். 17


கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட அகில இலங்கை பரதநாட்டிய போட்டியில் 'புலியாட்டம்' மற்றும் 'பழந்தமிழ் வீரன்' ஆகிய பிரிவுகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

அகில இலங்கை பரத நாட்டிய போட்டி பளை மத்திய கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது, ஆண்களுக்கான தரம் - 9, 10, 11 பிரிவில் நடத்தப்பட்ட 'புலியாட்டம்' குழு நடனத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றனர். அதேபோன்று ஆண்களுக்கான தரம் - 9, 10, 11 பிரிவில் நடத்தப்பட்ட 'பழந்தமிழ் வீரன்' எனும் தனி நடனப் போட்டியிலும் முதலாமிடத்தை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் வா.மேகவன் பெற்றுக்கொண்டான்.

அதேவேளை ஆண்களுக்கான தரம் - 9, 10, 11 பிரிவு 'புலியாட்டம்' குழு நடனத்தில் யாழ். மகாஜனக் கல்லூரி மாணவர்கள் 2ஆம் இடத்தையும், 'பழந்தமிழ் வீரன்' எனும் தனி நடனப் போட்டியில் ஹாட்லிக் கல்லூரி மாணவன் இ.ரதுசன் 2 ஆவது இடத்தையும், மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் எம்.கார்த்திகேயன் மூன்றாவது இடத்தையும் பெற்றனர்.

(ச-100)





கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக உப்புல செனவரத்தின கடந்த 12ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சி - இரணைமடுவில் அமைந்துள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றார். (ய-113)

# யாழ். போதனா மருத்துவமனை பாதுகாப்பு ஒழுங்கு ஆராய்வு

பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் தாக்குதல் நடத்தப்பட்ட விவகாரம் தொடர்பில் தனியார் பாதுகாப்பு தலைமை நிறுவன உயர் அதிகாரிகளுடன் யாழ். போதனா நிர்வாகத்தினர் நேற்று கலந்துரையாடலில் ஈடுபட்டதாக போதனா மருத்துவமனையால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் மருத்துவமனை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவர், நோயாளியைப் பார்வையிட வந்த ஒருவரை மருத்துவமனை வாயிலில் வைத்து தாக்கியமை தொடர்பாகவும், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வேறு சில சந்தர்ப்பங்களில் பொது மக்களுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் தொடர்பாகவும் கொழும்பில் உள்ள தனியார் பாதுகாப்பு தலைமை நிறுவனத்தில் இருந்து உயர் அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு நேற்று திங்கட்கிழமை மருத்துவமனையில் முக்கியமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மருத்துவமனைத் தரப்பால் சில ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

தனியார் பாதுகாப்புச் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது வெளிப்படைத்தன்மை பேணப்படுவதோடு உரிய தகைமை உடையவர்களை ஆட்சேர்ப்பு செய்யவேண்டும்.

பாதுகாப்புச் சேவைக்கு சேர்க்கப்படுபவர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்களை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் எனவும் அவர் மருத்துவமனை நிர்வாகத்தினருடன் சுமுகமான உறவை பேணுபவராக இருக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

பிரச்சினைகளில் ஈடுபடும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உடனடியாக வேலையில் இருந்து நீக்கப்படவேண்டும் எனவும் கூறப்பட்டது.

காலாண்டுக்கு ஒருமுறை உயர்மட்ட அதிகாரிகள் வருகை தந்து பாதுகாப்புச் சேவை மேம்படுத்துவது தொடர்பாக நிர்வாகத்துடன் கலந்துரையாடல் வைக்கப்படவேணடும் எனவும் கூறப்பட்டது.

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளையும் பொறுப்புகளையும் உணர்ந்து செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டது- என்று அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-ஏ-20-26-66-100)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திரு. செல்லத்துரை கௌரிசங்கர்**
அவர்களின் அன்புத் தந்தை
**முத்துத்தம்பி செல்லத்துரை**
அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
**தாதியர் நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**
(cs.26632) (N.1)




விவசாயிகளுக்கு இழப்பீட்டு காசோலை வழங்கிவைப்பு

கிளிநொச்சி, ஒக். 17


கிளிநொச்சி விவசாயிகளுக்கு இழப்பீட்டுக்கான காசோலை வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பங்கேற்று காசோலைகளைக் கையளித்தார்.

நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலர் முரளிதரன், விவசாயத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் எஸ்.சுகந்தினி, கமநலசேவைகள் நிலைய உதவிப் புணிப்பாளர் தேவகரன் மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கமநல காப்புறுதிச் சபையின் பணிப்பின் கீழ் வெள்ளம், வறட்சி, யானைகளின் தாக்கத்துக்குள்ளான விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-113)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 . 04 . 1972
மறைவு 29 . 09 . 2022

அமரர்
**சிவபாக்கியம் சுப்பிரமணியம்** (சொருபன்)
பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டு பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கிறீர்கள்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிராத்திக்கின்றோம்,
தர்மலிங்கம் துாமியடி
தாவடிவடக்கு,
கொக்குவில்.
(cs26605) (AK.1)
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்நோயால் பாதிக்கப்பட்ட மாணவர்களையும் பரீட்சைக்கு அனுமதிக்குக

## மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிப்பு

கண் நோய் என்று பாடசாலைக்கு வருகை தரும் மாணவர்களைத் திருப்பி அனுப்பவேண்டாம். அவர்களைத் தனியான இடத்தில் பரீட்சை எழுத அனுமதிக்குமாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார்.

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் இரண்டாம் தவணைப் பரீட்சை நடை பெற்று வரும் நிலையில், மாணவர்கள் பலர் கண்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை சில பாடசாலைகள் பரீட்சை எழுத விடாமல் திருப்பியனுப்பியுள்ளதாக எழுந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார். (ஓ-26)

### மே 18...

இதன் முதல் கட்டமாக இந்தத் தூபியை அமைப்பது தொடர்பில் செலவழிக்கப்பட்ட நிதி விவரங்கள் மற்றும் பெறப்பட்ட அனுமதிகள் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். இவர் மீதான விசாரணைகள் நாளை மறுதினம் 19ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

அதேவேளை பாதுகாப்புத் தரப்பும் இதன் அடிப்படையில் அந்தத் தூபியை அகற்றுவதற்கான நகர்வுகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இந்தத் தூபி முறையான அனுமதிகள் எதுவுமின்றி கட்டப்பட்டதாக 2020ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி இடித்து அகற்றப்பட்டிருந்தது. இதனையடுத்து எழுந்த எதிர்ப்புகள் மற்றும் அழுத்தங்களின் காரணமாக அதனை அவ்விடத்தில் அமைப்பதற்கு அப்போதைய அரச தலைமையோ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிர்வாகமோ எதிர்ப்பு எதனையும் தெரிவிக்காத நிலையில் அந்தத் தூபி மீண்டும் அமைக்கப்பட்டதுடன் வருடாந்தம் மே 18 நிகழ்வுகள் பல்கலைக்கழக சமூகத்தால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. (அ-ஒ-5-26)

### கடையடைப்புக்கு...

இது தொடர்பான கலந்துரையாடல் வவுனியா, வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேலும் கருத்துத் தெரிவித்த கட்சிகளின் பிரதிநிதிகள்;

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா மீதான அச்சுறுத்தலின் மூலம் நீதித்துறை சுயாதீனமாகச் செயற்படமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. தமிழர் பிரச்சனைக்கு உள்நாட்டில் நீதியைக் காண முடியாது என்று நாம் வலியுறுத்திய விடயத்துக்கு இந்த சம்பவம் சிறந்த எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில் தமிழ்மக்களின் கவனத்தை திசைதிருப்பும் செயற்பாட்டை இந்த அரசாங்கமும், ஜனாதிபதியும் முன்னெடுத்து வருகின்றனர். இந்த அரசியல் சூழ்நிலையில் ஜனாதிபதியின் ஒவ்வொரு அரசியல் நகர்வுகளையும் நுணுக்கமாக ஆராய்ந்து எதிர்காலத்தில் எப்படிசெயற்படவேண்டும் என்ற காத்திரமான முடிவை எடுக்கவேண்டிய கட்டாயத்துக்கு தமிழ்மக்களும் தமிழ்த்தேசிய கட்சிகளும் தள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை வடகிழக்கு மாகாணம் தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள கடையடைப்பு போராட்டத்துக்கு பொதுமக்கள் வர்த்தகசங்கத்தினர், பேருந்து உரிமையாளர் சங்கம், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் உட்பட அனைத்து பொது அமைப்புகளும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் என்று தெரிவித்தனர். (அ-ஒ-110)

### கிளிநொச்சிவாசி...

சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக அவர்களது உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாயவனூர் பகுதியைச் சேர்ந்த பாலசிங்கம் யுகதீபன் (வயது - 40) என்பவரே இவ்வாறு சடலமாக பெலாரஸ் நாட்டு இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

குறித்த நபர் பிரான்ஸுக்கு செல்வதற்காக, சட்டவிரோத முகவரை நம்பி விமானம் மூலம் ரஷ்யா சென்றிருந்தார். அங்கிருந்து பெலாரஸ், போலந்து, ஜேர்மன் ஊடாக பிரான்ஸ் செல்வதற்காக சுமார் 700 கிலோ மீற்றர் தூரத்தை நடந்து கடப்பதற்காக ஏழு பேர் கொண்ட குழுவுடன் அவர் பயணமாகியிருந்தார். அப்போதுஅவரது உடல்நிலை பாதிக்கப்பட்டதால், அவருடன் சென்ற ஏனையோர் அவரை அங்கேயே விட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். இந்த நிலையிலேயே அவர் பெலாரஸ் எல்லையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி சனிக்கிழமை, பெலாரஸ் எல்லையில் இருந்து சில கிலோ மீற்றர்கள் தொலைவில் உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் வட்டக்கச்சியில் உள்ள மனைவியோடு அவர் தொலைபேசிஊடாகத் தொடர்புகொண்டிருந்தார்."என்னால் நடக்க முடியாதுள்ளது. என்னை யாரேனும் காப்பாற்றினாலே தவிர உயிர் தப்ப வேறு வழியில்லை" என்று அவர் தெரிவித்தாரென உறவினர்கள் கூறுகின்றனர். அதுவே அவர் இறுதியாக தொடர்பு கொண்டு பேசியது என்றும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-214)

### மோசடி...

சந்தேகத்தில் கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர் கொக்குவில் பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞரிடம் வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து 80 இலட்சம் ரூபா மோசடி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டு அம்பாறை பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபருக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

விசேட விசாரணைகளை ஆரம்பித்திருந்த அம்பாறை மாவட்ட பொலிஸார் கோப்பாய் பொலிஸாருடன் இணைந்து நேற்று மதியம் சந்தேகநபரைக் கைது செய்தனர். (ஓ-125)

### பல்வேறு...

கடற்கரையில் சந்தேகத்துக்கிடமான படகைச் சோதனையிட்டபோது இவை மீட்கப்பட்டுள்ளன. இவற்றின் சந்தை மதிப்பு 94 மில்லியன் ரூபா என கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ஓ,26)

### குடும்பப்பெண்...

நாவற்குழி ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த அஜந்தன் கார்த்திகா (வயது - 23) என்ற இளம் குடும்பப் பெண்ணே உயிரிழந்துள்ளார். இவருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் கூறியதாவது:-

15ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இளம்குடும்பப் பெண் ஒருவரை அவரது கணவரும், கணவரின் தாயாரும் சேர்த்துள்ளனர். பெண் மயங்கிய நிலையில் இருந்துள்ளார். நேற்றுக் காலை மருத்துவமனையில் அவர் உயிரிழந்துள்ளார். கணவரைத் தேடியபோது அவர் தலைமறைவாகியுள்ளார். இதனையடுத்து யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய, கணவன் யாழ்ப்பாணம் கச்சேரியடியில் முச்சக்கரவண்டியில் தப்பிக்க முற்பட்டபோது பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தீவிர விசாரணை முன்னெடுக்கப்பட்ட நிலையில், மனைவி தவறான தொடர்பை தனது சகோதரருடன் வைத்திருந்ததை அறிந்து ஆத்திரமுற்றதால் இருவரையும் தாக்கினேன். ஆனால் அவர் உயிரிழந்தமை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர் ஏற்கனவே சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர் என்பதுடன் வேறு சில குற்றச் செயல்களுடன் தொடர்புள்ளவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். சந்தேகநபரின் தாக்குதலுக்கு இலக்காகி அவரின் சகோதரரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-ஒ-20-26-27-100)

### காவலாளி...

சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை இறப்புவிசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர், சடலத்தை பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு சென்று உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறைபொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ-ஒ-100)

### ஆணொருவர்...

நாதன் தங்கநாதன் (வயது-63) என்பவரே இவ்வாறுசடலமாகமீட்கப்பட்டுள்ளார். வீட்டில் வழமைபோன்று இரவு படுக்கையில் இருந்த நபரை காலையில் காணாத நிலையில் தேடியபோதே, அவர் வீட்டின் பின்புறம் தவறான முடிவு எடுத்து உயிரிழந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணை மேற்கொண்டதுடன், சடலத்தை பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு சென்று உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ-ஒ-100)

### காதல்...

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறைந்த வயதுடைய சிறுமியை இவர் காதலித்து வந்துள்ளார். இந்த விடயம் தெரியவந்ததை அடுத்து இளைஞனது பெற்றோர், சிறுமிக்கு வயது குறைவு என்பதால் தொடர்ந்து அவருடன் பழக வேண்டாம் எனவும், உரிய வயது வந்த பின்னர் திருமணம் செய்து வைக்கலாம் எனவும் குறித்த சிறுமியின் பெற்றோருக்கும் தனது மகனுக்கும் கூறியுள்ளனர். இந்த விடயத்தை ஏற்றுக்கொள்ளாத சிறுமி, உடனடியாகத் தன்னை திருமணம் செய்யாவிட்டால் தான் உயிரை மாய்த்துக் கொள்ளவேன் என காதலனான இளைஞனுக்கு தொலைபேசி மூலம் செய்தி அனுப்பியுள்ளார்.

இதனையடுத்து இளைஞன், காதலியான சிறுமி தவறான முடிவு எதனையும் எடுத்துவிடுவாரோ என்ற அச்சம் காரணமாக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் தனது வீட்டிலேயே தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை பார்வையிட்டதுடன் உயிரிழப்புத் தொடர்பில் யாழ். போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். இதையடுத்து உடற்கூற்றுப் பரிசோதனைக்கு பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (அ-ஒ-100-26)

### நண்பிகள்...

மீட்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

'எங்களது சாவுக்கு யாரும் காரணமல்ல. இது நாங்கள் எடுத்த முடிவு. எங்களுக்கு வாழவே பிடிக்கவில்லை' என எழுதப்பட்ட கடிதம் சிறுமிகள் இருவரும் உயிரிழந்த இடத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் இரண்டு மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுரேஸ்குமார் தனிகை (வயது - 17), லோகேஸ்வரன் தமிழினி (வயது-17) ஆகிய இரண்டு சிறுமிகளுமே லோகேஸ்வரன் தமிழினியின் வீட்டுச் சமையலறையில் தவறான முடிவு எடுத்து இருவேறு சேலைக் கயிற்றில் தனித்தனியாக தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

வீட்டில் எவருமில்லாத நேரத்தில் சிறுமிகள் இருவரும் இவ்வாறு தவறான முடிவை எடுத்துள்ளனர்.

இவர்கள் இருவரும் இறுதியாக நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேறுக்காகக் காத்திருக்கும் மாணவிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-26-113-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 5 புலமைப்பரிசில் வினாத்தாள் வெளியிட்டோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை!



கொழும்பு, ஒக்.17

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை முடிவடைந்த சில மணிநேரங்களுக் குள் சமூகவலைத்தளங்களில் வினாத்தாள்களை வெளி யிட்டவர்களுக்கு எதிராக கடு மையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாய கம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

சமூகவலைத்தளங்களில் குறித்த வினாத்தாள்களை வெளியிட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை நேற்றுமுன்தினம் காலை 2 ஆயி ரத்து 888 பரீட்சை நிலையங்களில் நடைபெற்றது. இந்தப் பரீட்சைக்கு 3 இலட்சத்து 37 ஆயிரத்து 956 பேர் தோற்றியிருந்தனர்.

பரீட்சை நேற்றுமுன்தினம் பிற்பகல் 12.15க்கு முடிவ டைந்த நிலையில், சில மணி நேரங்களில் வினாத் தாள்கள் மற்றும் விடைத்தாள்கள் சமூக வலைதளங் களில் வெளியாகின. புலமைப்பரிசில் பரீட்சை நடத் தப்பட்ட சில மணித்தியாலங்களுக்குள் அதைப் பகி ரங்கப்படுத்தவேண்டாம் என பரீட்சை மண்டப பொறுப்பாளர் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணை யாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சை எழுதியதன் பின்னர் வீடுதிரும்பும் மாணவர் கள், மேலும் மன உளைச்சலுக்கு ஆளாவதைத் தடுக்கும் நோக்கில் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட் டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

அறிவுறுத்தலை மீறி புலமைப்பரிசில் பரீட்சை முடிவ டைந்த சில மணி நேரங்களிலேயே வினாத்தாள்கள் பகிரங்கப்படுத்தப்பட்டதால் சில மாணவர்கள் மன உளைச்சலுக்கு ஆளானதாக தெரியவருகின்றது. பரீட்சை முடிவடைந்த சில மணித்தியாலங்களில் சமூக ஊடகங்களில் வினாத்தாள்கள் வெளியான போதும், பரீட்சையின் இரகசியத்தன்மைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை - என்றார். (எ-இ)

## பலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்தார் மஹிந்த!



கொழும்பு, ஒக்.17

இஸ்ரேல் - பலஸ்தீனத்தின் ஹமாஸ் இயக்கத்துக்கு இடையில் தீவிர போர் நடைபெற்றுவரும் பின் புலத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, பலஸ்தீன தூத ரகத்துக்குச் சென்று தமது ஆத ரவை வெளிப்படுத்தியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ச, ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில், இஸ்ரேல் பலஸ்தீன விவகாரத்தில் பலஸ் தீனத்துக்கான ஆதரவை வெளிப் படுத்தியிருந்தார். பலஸ்தீனத்துக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியையும் மஹிந்த ராஜபக்ச 2014ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் வழங்கியிருந்தார். பலஸ்தீனத்தின் நீண்டகால ஆதர வாளராக ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ச உள்ளார்.

பலஸ்தீன கூட்டொருமைப்பாட்டுக் கான இலங்கை செயற்குழுவின் ஸ்தாபகத் தலைவராகவும் அவர் செயற்பட்டிருந்தார்.

பலஸ்தீனத்தை ஒரு தேசமாக 1988ஆம் ஆண்டு இலங்கை அங்கீகரித்தது 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பலஸ்தீ னத்தில் 'மஹிந்த ராஜபக்ச வீதி' என ஒரு வீதிக்கு பெயரிடப்பட்டுள் ளது. (எ-இ)

## 56 ஆயிரம் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துக் குறைபாடு!

கொழும்பு, ஒக்.17

இலங்கையில் 56 ஆயிரம் குழந்தைகள் கடுமை யான ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டு வருவதாக பொருளாதார நெருக்கடியின் தாக்கத் தைத் தணிக்கும் துறைசார் மேற்பார்வைக் குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (யுனிசெஃப்) வெளி யிட்ட ஆய்வறிக்கையில் இந்தத் தகவல்கள் வெளியி டப்பட்டுள்ளன என்று பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணிக்கும் துறைசார் மேற்பார்வைக் குழுத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள குடும்பங்களில் சுமார் மூன்றில் ஒரு பங்கு பகுதியினர் பாதுகாப்பான ஊட்டச்சத்து பொருள்களைப் பெறுவதற்கான வாய்ப்பு இல்லை என ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

## புத்தரை விற்பதற்கு முயன்றோர் கைது!

கொழும்பு, ஒக்.17

பெறுமதி வாய்ந்ததாகக் கருதப்படும் தங்கத் திலான பழங்கால புத்தர் சிலையை விற் பனை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் இரு வர் ஹல்மில்லவ பிரதேசத்தில் கைது செய் யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது. புத்தர் சிலை பொலிஸ் விசேட அதிரடிப்படையின ரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் முல் லைத்தீவு முகாமின் அதிகாரிகள் குழு மற்றும் புனேவ பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடங் கிய குழுவினர் புத்தர் சிலையுடன் சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர். வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்த இருவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள் ளனர். (எ-இ)

## சைவப்புலவர் க.செல்லத்துரை ஆண்டு நினைவும் பரிசளிப்பும்

கொடிகாமம் ஒக் 17

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத் தின் 24 ஆண்டுகள் புகழ்பூத்த அதிபராகவிருந்த சைவப்புலவர் க.செல்லத்துரையின் இரண்டாம் ஆண்டு நினைவு தினமும் பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய ஏழூர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவப் புலவர் சு.செல்லத்துரை அறக்கட்டளை நிதியத் தலைவரும் கீரிமலை நகுலேஸ்வர ம.வி. அதிபருமான த.தயானந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப்பல்கலைக்கழக இந்து நாகரிகத்து றைத் தலைவர் கலாநிதி சுகந்தினி சிறிமுரளி தரன், சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்டத் தேர்தல் ஆணையாளர் வே.சிவராஜா, கௌரவ விருந்தினராக முன்னாள் ஆசிரிய ஆலோசகரும் கல்விமாணி, சட்டத்தரணியுமான நா.அரியபுத்தி ரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-159)

## கீரிமலை ஜனாதிபதி மாளிகையை யாழ். பல்கலையிடம் ஒப்படைக்குக

### ஆறு.திருமுருகன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 17

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கீரிமலை ஆதிசிவன் கோயில், சடையம்மா மடம், உச்சிப் பிள்ளை யார்கோவில் போன்றவை இடிக்கப் பட்டு அச் சுற்றாடலில் கட்டப்பட்ட ஜனாதிபதி மாளிகை பயனற்றுள் ளது. இந்த ஜனாதிபதி மாளிகையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துக்கு அல்லது இந்துசமயம் சார்ந்த நிறுவனங்களுக்கு வழங்கவேண் டும். இதைவிடுத்து தென்னிலங் கையிலுள்ள தனியார் நிறுவனங் களுக்கு நீண்டகால குத்தகை என்ற பெயரில் இவற்றை ஒப்படைக்கக் கூடாது என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமு ருகன் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத் தில் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த ஜனாதிபதி மாளிகை தனியார் நிலங்களிலும், சைவசமய நிறுவ னங்களின் நிலங்களிலும் போரைப் பயன்படுத்திக் கட்டப்பட்டது. கடந்த முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாக உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பொதுமக்கள் போக முடியாமல் கடற்படையின் பொறுப் பில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இது மிக வேதனையான விடயம். இந்தப் பகுதியிலிருந்த சித்தர்களின் சமாதிகள் பல உடைக்கப்பட்டுவிட் டன. இது நாட்டுக்கு கெடுதியா னவை. எனவே, இவற்றை உடனடியாக உரியவர்களிடம் ஒப்படைக்கவேண்டும். எந்தக் காரணம் கொண்டும் தென்னி லங்கையைச் சார்ந்த வாணிப நிறுவனங்களுக்குக்கையளிக்கக் கூடாது. இது திட்டமிட்ட அநியா யச் செயற்பாடு. இந்தவிடயம் தொடர்பாக ஜனாதிபதி உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். காங்கேசன்துறை, பலாலி வீதியில் சிவபூமி அறக்கட்ட ளைக்கு உரித்தான சுக்கிரவார திருகோணத்திர நிலத்தை இராணுவ நலன்புரிச் சங்கம் தல்செவன ஹோட்டலின் பயன்பாட் டுக்கு வைத்துள்ளார்கள். நூற்றி யாறு பரப்புக் கொண்ட சைவசமய நிறுவனத்தின் மடத்தை அழித்து ஹோட்டல் பயன்பாட்டிற்குப் பயன் படுத்தி வருகிறார்கள். இது நீதியற்ற செயல். உடனடியாக தல்செவன ஹோட்டலின் பயன்பாட்டிலுள்ள சமய நிறுவனத்தின் நிலம் ஒப்ப டைக்கப்படவேண்டும் - என்றுள் ளது. (ம-66)


**விற்பனைக்கு**

WP xxxx இலக்கமுடைய Super Cop - 50 (Japan) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு

076 464 8576, 077 112 7607

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கிவரும் எமது புடைவை நிறுவனத்திற்கு ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை.

முன்அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

077 855 4840



செய்தி : 021 483 0000 - விளம்பரம் : 021-493 1111 மின்னஞ்சல் : news@uthayan.com விளம்பரம் : advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி இல. 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org